நாள். 12.12.2023

STC No. 120/2021

மா.சா.1

திரு. சதீஸ்குமார்

த/பெ. மனோகரன்

சத்தியப்பிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

1. எதிரியை எனக்கு 2014 மார்ச் மாதத்திலிருந்து தெரியும். எனது உறவினரான தங்கராஜ் என்பவரின் மூலம் எனக்கு தெரியும். தங்கராஜ் விஜயமங்கலத்தை சேர்ந்தவர். விஜயமங்கலத்தில் உள்ள நெட்டகோபுரம் ஆகும். தங்கராஜ் எனது சித்தியின் கணவர் ஆவார். ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விஜயமங்கலம் மேட்டுபுதூர் கிராமம் கதவு எண். 2/255 த/பெ. முத்துசாமி கவுண்டரின் மகன் மாரப்பன் என்பவரை எனக்கு தெரியாது. எனது சித்தியின் கணவரான தங்கராஜியின் தகப்பனார் பெயர் முத்துசாமி, தங்கராஜ் மாரப்பன் ஒருவரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது உறவினரான தங்கராஜ் வீட்டிற்கு சுமார் 20 முறை சென்றிருப்பேன்.

2. ஜனவரி 2016 – டிசம்பர் 2020 வரை நான் கூல்டிரிங்ஸ் டீலர்சிப் எடுத்து நடத்தி வந்தேன். எதிரி எனக்கு அறிமுகமான தேதியிலிருந்து 6 வருட இடைவெளியில் வழக்கு கடனை கொடுத்தேன். நான் கடன் கொடுத்த சமயத்தில் எதிரி ஓட்டல் நடத்தி வந்தார். நான் 2015 ல் கடன் கொடுத்தேன். எதிரி ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் ஆவார். அதை தவிர்த்து எதிரிக்கு 2 ஆண் மக்கள் உள்ளார்கள். எதிரியின் ஓட்டல் நான் சென்றிருக்கிறேன். வீட்டிற்கு போனதில்லை. எதிரியின் மகன்கள் எனக்கு பழக்கமில்லை. எனது சித்தி லாதாவின் ஆதார் அடையாள அட்டையில் கணவர் பெயர் மாரப்பன் என்று உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. லாதாவின் கணவர் தங்கராஜ் ஆவார். தங்கராஜியுடன் பரஸ்பர பழக்க வழக்கதில் உள்ளேனா என்றால் ஆமாம்.

3. தங்கராஜ் கூட்டுறவு வங்கியின் மேலாளராக பணிபுரிகிறார். தங்கராஜ், எதிரியும் பல வருடங்கலாக பழக்கம் என்றால் சரிதான். எனது சித்தப்பா தங்கராஜ் மூலமாக தான் எனக்கும் எதிரியும் பழக்கமானர். எதிரியின் ஓட்டலுக்கு அழைத்து செல்வதன் மூலம் பழக்கம் ஏற்பட்டது. எதிரியும், தங்கராஜ்யும் 2014 ல்கூட்டாக finance நடத்தி வந்தார்

என்றால் சரியல்ல. தங்கராஜ் தனிப்பட்ட முறையில் தான் finance நடத்தி வருகிறார். எதிரி finance ல் பங்குதாரா என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கடன் கொடுத்தாக சொல்லப்படும் தொகையானது எனது வாழ்நாள் சேமிப்பு தொகையாயனது என்றால் சரியல்ல. நான் தொழில் செய்ய வேண்டி கடன் பெற்று Rotation க்கு வைத்திருந்த தொகையாகும். எதிரி என்னிடம் கடன் பெற வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு வசதி வாய்ப்புகள் உண்டு என்றால் சரியல்ல.

4. எதிரி பஞ்சாயத்து பிரசிடண்டாக இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி பஞ்சாயத்து பிரசிடண்ட் என்பதை நான் தற்போது தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். மாரப்பன் (எ) தங்கராஜ்க்கும், எதிரிக்கும் இடையே சுமுகமான உறவுமுறை உள்ளதா என்றால் இல்லை. தற்போது ஏதோ பிரச்சனை என்று சொன்னார்கள். வழக்கறிஞர் அறிவிப்பானது நான் கையொப்பம் செய்ததற்கு பின்னிட்டு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். எதிரிக்கு கொடுத்த கடனை வங்கியிலிருந்து எடுத்து கடன் கொடுக்கவில்லை. எனது கையிருப்பில் இருந்து தான் கடன் கொடுத்தேன்.

5. எதிரியுடன் எனக்கு கடந்த 5 வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். கடன் கொடுத்த தேதிக்கு 10, 15 தேதிக்கு முன்பாக கடன் கேட்டார்.எதிரியுடன் 5 வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லாத நிலையில் எதிரி என்னிடம் கடன் கேட்டு நான் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. கடனை எதிரி நேரடியாகவே என்னிடம் பெற்றுக்கொண்டார். பணம் பட்டுவாடா நடவடிக்கையானது பென்னாகரத்தில் வைத்து தான் நடந்தது. என் வீட்டில் வைத்து கடன் கொடுக்கவில்லை. எனது வீட்டிற்கு பக்கத்தில் உள்ள ஒரு இடத்தில் வைத்து கொடுத்தேன்.

6. எதிரி என்னிடம் கடன் தொகையை வாங்கிக்கொண்டு சென்றுவிட்டார் என்றால் சரிதான். காசோலையில் எழுதப்பட்ட எழுத்துக்களுக்கு வேறுபாடு உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் மா.தா.சா.ஆ.2 காசோலையில் பெயர் தொகை உள்ளிட்டவை தனித்தனியாக எழுத்துக்களாக உள்ளது என்றால் சரிதான். மா.தா.சா.ஆ.1 காசோலையில் ஒட்டெழுத்துகளாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு சரியல்ல என்று கூறுகிறார். காசோலையில் சதீஸ்குமார் என்ற பெயரானது எனது கைப்பட எழுதப்பட்டது என்றால் சரிதான்.

7. காசோலை தேதியானது பால்பாய்ன் பேனாவில் தான் எழுதப்பட்டது. எதிரிக்கு வீதியில் வைத்து கடன் கொடுத்த சமயத்தில் 3ம் நபர்கள் இருந்தார்களா என்றால் இல்லை. காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணால் (Numerical) எழுத்தப்பட்ட தொகையானது என்னால் எழுதப்பட்டது என்றால் சரிதான். இரண்டு காசோலைகளிலும் எதிரி கையொப்பமிடப்பட்டதற்கு 2 நாட்கள் கழித்து தான் தொகையும், தேதியும் பூர்த்தி செய்யப்பட்டது. நான் எதிரிக்கு கடன் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் கடன் பெறவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. மாரப்பன் (எ) தங்கராஜ்க்கும், எதிரிக்கும் இடையே பிரச்சனை உள்ள நிலையில் அதனை தெரிந்துக்கொண்டே முந்தைய நடவடிக்கைக்காக மாரப்பனிடம் கொடுத்த காசோலையை பெற்று இந்த புகார் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

8. ஸ்ரீ ராஜ கணபதி finance என்ற நிதி நிறுவனத்தில் மாரப்பனும், எதிரியும் பங்குதாரார்களாக இருந்தார்கள் என்றாலும் ஓட்டல் தொழிலுக்காக 2018 ல் எதிரி மாரப்பனிடமிருந்து கடன் பெற்றுள்ளார் என்றாலும் அதற்காக மாரப்பனிடம் கொடுக்கப்பட்ட வெற்று காசோலைகளில் பூர்த்தி செய்து இந்த வழக்கில் பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. விஜயமங்கலம் tolgate அருகில் உள்ள பல்லக்காட்டுர் என்ற ஊரில் ஆரம்பத்தில்மாரப்பனும் அவரது மனைவி லதாவும் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். எதிரியின் mobile எண் தெரியும். எதிரியின் சுட்ச்ஆப் ஆன mobile எண். 9842738088. வழக்கு தாக்கல் செய்த 2,3 மாதங்களுக்கு முன்பாகவே எதிரியின் mobile எண்ணானது சுட்ச்ஆப் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்யவதற்கு முன்பாக எப்போது பேசினேன் என்றால் 10,15 நாட்களுக்கு முன்பாக பேசினேன். அதற்கு முன்பாக 2,3 மாதங்களுக்கு முன்பாக பேசினேன். எதிரி சமுதாயத்தில் மதிப்புமிக்க நபர் என்ற நிலையில் என்னிடம் கடன் பெறவேண்டி அவசியமில்லை என்றால் சரியல்ல.

9. மாரப்பன் எனது சித்தப்பா என்ற நிலையில் அவரிடமிருந்து காசோலையை பெற்று முறையற்ற விதத்தில் ஆதாயம் அடைய வேண்டும் என்ற நோக்கில் பெற்று இந்த வழக்கில் பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. வீதியில் வைத்து பெருந்தொகையான ரூ.3,00,000/- கொடுத்ததாக சொல்வதிலிருந்தே எனது கூற்று உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. இரண்டு காசோலைகளையும் ஒரே

தேதியில் colection க்கு போட்டேனா என்றால் ஆமாம். எனது சாட்சியமானது முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது வழக்கு பொய்யானது என்பதால் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.